**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.**
**(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்),**
**தொலைபேசி: 044-29515590**

**ஆணை நாள் 01.07.2026**

**முன்னிலை**
**திரு அ. விஜயராம், எம்.ஏ., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 15736/H/2024**

| | |
|---|---|
| **திரு க.மாரீஸ்வரன்** | **மேல்முறையீட்டாளர்** |

***/எதிர்/***

| | |
|---|---|
| **பொதுத் தகவல் அலுவலர்/**<br>**மாநகர நல அலுவலர்**<br>**சிவகாசி மாநகராட்சி அலுவலகம்**<br>**சிவகாசி மாநகராட்சி**<br>**விருதுநகர் மாவட்டம்.** | **பொது அதிகார அமைப்பு** |

**கோரிய தகவல்:** **மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 03.10.2024 அன்று தாக்கல் செய்துள்ள மனுவில் தாங்கள் பணிபுரியும் அலுவலகத்தில் கையாளப்படும் 16 வகையான ஆவண பதிவேடுகள் என்னென்ன பதிவேடுகள் அவற்றின் பெயர்களுடன் தகவலாக வழங்கக் கோரி மொத்தம் 4 இனங்களில் மனு தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் தனக்கு திருப்தியளிக்கவில்லை எனத் தெரிவித்து, மேல்முறையீட்டாளரால் 02.12.2024 அன்று தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது இன்று (01.07.2026) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.**

| | |
|---|---|
| **மேல்முறையீட்டாளர்** | **திரு க.மாரீஸ்வரன் இன்று விசாரணைக்கு ஆஜரானார்.** |
| **பொதுத் தகவல் அலுவலர்** | **பொதுத் தகவல் அலுவலர் திரு. க.சத்தியராஜ், துப்புரவு அலுவலர், சிவகாசி மாநகராட்சி அவர்கள் ஒப்புதல் கடிதம் மூலம் விசாரணைக்கு நேரில் ஆஜரானார்.** |

## ஆணை

இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு 04.11.2024 தேதியிட்டக் கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கியுள்ளதாகத் தெரிவித்து அதற்குண்டான ஆவண நகலினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

2. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் பொது தகவல் அலுவலர் அளித்த தகவல்கள் தனக்கு திருப்தியளிக்கவில்லை என தனது வாதத்தை எடுத்துரைத்தார்.

3. இன்றைய விசாரணையின் முடிவில், கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

- மனுதாரர் கோரியுள்ள இனங்களில் 2 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, பொது தகவல் அலுவலரால் போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதை இவ்வாணையம் பதிவு செய்கிறது.
- மேலும், 1ம் இனத்திற்குரிய தகவல்களை, மனுதாரர், பொது தகவல் அலுவலரை அணுகி குறிப்பிட்டுக் கோரி பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தி இவ்வழக்கு முற்றாக்கம் செய்யப்படுகிறது.

ஒம்/- (அ. விஜயராம்)
மாநில தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். SA 15736/H/2024</u>
<u>பெறுநர்</u>
<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர்/
மாநகர நல அலுவலர்
சிவகாசி மாநகராட்சி அலுவலகம்
சிவகாசி மாநகராட்சி
விருதுநகர் மாவட்டம்.

<u>மேல்முறையீட்டாளர்</u>

திரு க.மாரீஸ்வரன்
த/பெ.செ.கந்தவேல் நாடார்
கதவு எண்.463/ப 259 பாண்டியன் நகர் ஆறாவது தெரு
திருத்தங்கல் நகரம் 626 130.

Copy to : File
VM/PA